

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2026) சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 100 தொழிலாளர்களுக்கு மானிய விலையில் (escooter) இஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்து, கிக் தொழிலாளர்களுக்கு இ-ஸ்கூட்டர்களுக்கான சாவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் மு.சாய்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2026) சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பணிபுரியும் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரக அலுவலர்கள், சார் ஆட்சியர்கள், துணை ஆட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்காக 13 கோடியே 73 இலட்சத்து ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 155 புதிய வாகனங்களையும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 100 தொழிலாளர்களுக்கு மானிய விலையில் (escooter) இ-ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### மேற்கு வங்க முதல்வர்

# மம்தா பானர்ஜி பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜன. 6 -**

**மேற்கு வங்க மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-.**



மேற்கு வங்க மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!

முதலமைச்சராக, தங்களது அரசாங்கம் மதச்சார்பின்மையை ஆட்சி நிர்வாகத்தை வழிநடத்தும் கொள்கையாக நிலைநிறுத்தி, மாநிலமானது அனைவருக்கும் சமமான உரிமை கொண்டது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

அனைவரையும் உள்ளடக்கிய இந்த ஆட்சி அணுகுமுறை தொடர்ந்து அரசியலமைப்பு விழுமியங்களையும் சமூக நல்லிணக்கத்தையும் வலிமைப்படுத்தட்டும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற

# 100 தொழிலாளர்களுக்கு மானிய விலையில் இ-ஸ்கூட்டர்கள்!

## திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன. 6 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2026) சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 100 தொழிலாளர்களுக்கு மானிய விலையில் (escooter) இ-ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாட்டில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் நல உதவிகள் வழங்கிடவும், தமிழ்நாடு அரசால் 18 அமைப்புசாரா தொழிலாளர்கள்நலவாரியங்கள்அமைக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

இதன்மூலம் கல்வி, திருமணம், மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச்சடங்கு, விபத்து ஊனம், மாதந்திர ஓய்வூதியம் போன்ற நலதிட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியம் மற்றும் இதர 18 நலவாரியங்களில் தற்போது 22,21,116 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். வாரியங்கள் துவங்கப்பட்டது முதல் இதுவரை 47,07,977 பயனாளிகளுக்கு 2,341 கோடி ரூபாய் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் 31.12.2025 வரையிலான காலங்களில் 7,57,104 அமைப்புசாரா தொழிலாளர்கள் புதியதாக பதிவு செய்துள்ளனர். இக்காலகட்டத்தில் 1,210 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 12,26,530 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 60 வயது பூர்த்தியடைந்த பதிவு பெற்ற 2,07,260 அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ரூ.1200/ வீதம் ஓய்வூதியம் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 2,333 பெண் / திருநங்கை ஆட்டோ ஓட்டுநர்கள் புதியதாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் செலவினத்தில் ரூபாய் ஒரு இலட்சம் வீதம் மானியமாக 23.33 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் இணைய சார்ந்த சேவை பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா கிக் தொழிலாளர்களின் (Gig Workers) நலனை பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கென தனியே நலவாரியம் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.08.2023 அன்று சுதந்திர தின உரையில் அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பிற்கிணங்க தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியம் (Tamil Nadu Platform based Gig Workers Welfare Board) 26.12.2023 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியத்தில் தமிழ்நாடு முழுவதும் 23,687 இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் ஓய்வு எடுக்கும் வகையிலும், கைபேசிக்கு மின்னூட்டம் (Charging) செய்வதற்கும், கழிப்பறை வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட ஓய்வுக்கூடங்கள் சென்னை மற்றும் கோயம்புத்தூர் போன்ற பெருநகரங்களில் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

மேலும், தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கு விபத்து மரணம் மற்றும் விபத்து ஊனத்திற்கு ரூ.5 இலட்சம் வரையிலான குழு காப்பீட்டுத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் 2,000 தொழிலாளர்களுக்கு புதிய eScooter வாங்கும் செலவினத்தில் ரூ.20,000/ மானியமாக வழங்கும் புதிய திட்டம் 2025-2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 100 தொழிலாளர்களுக்கு புதிய eScooter வாங்க மானியம் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ. வீரராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரிய செயலாளர் ஆ. திவ்விய நாதன், தொழிலாளர் கூடுதல் ஆணையர் திருமதி எ.யாஸ்மின் பேகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக

# ரூ.13.73 கோடி மதிப்பீட்டிலான 155 புதிய வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன. 6 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2026) சென்னை, தீவுத்திடலில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பணிபுரியும் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரக அலுவலர்கள், சார் ஆட்சியர்கள், துணை ஆட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்காக 13 கோடியே 73 இலட்சத்து ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 155 புதிய வாகனங்களை (Mahindra Bolero B4 AC BSVI) கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, அரசின் பல்வேறு நலத்திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்காற்றி வருகிறது.

மேலும், மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. எனவே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பணியாற்றும் உயர் அலுவலர்களுக்கு வாகனங்கள் மிகவும் இன்றியமையாத ஒன்றாக திகழ்கிறது.

2025-2026ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையில், "வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரக அலுவலர்களுக்கு 2 புதிய வாகனங்கள், சார் ஆட்சியர்கள், துணை ஆட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கு 153 புதிய வாகனங்கள் ஆக மொத்தம் 155 புதிய வாகனங்கள் ரூ.16.71 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரக அலுவலர்களுக்கு 2 புதிய வாகனங்கள், சார் ஆட்சியர்கள், துணை ஆட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கு 153 புதிய வாகனங்கள், என மொத்தம் 13 கோடியே 73 இலட்சத்து ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 155 புதிய வாகனங்களை (Mahindra Bolero B4 AC PS BSVI) முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் மேற்கண்ட உயர் அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை வருவாய்த் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 36 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் 370 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் மு. சாய்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, கூடுதல் ஆணையர் (வருவாய் நிருவாகம்) முனைவர் ச. நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# சேலத்தில் 25 மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரணங்கள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

*சேலம், ஜன. 6 -*

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று (5.1.2026) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன் குமார் ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.8 இலட்சம் மதிப்பீட்டிலான உதவி உபகரணங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் வழங்கினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் மீது அக்கறையோடு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி தந்திருக்கிறார்கள்.

அதேபோன்று, முதலமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையினை தனது நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் வைத்து அவர்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன்படி, இன்றைய தினம் மாவட்ட நிர்வாகம் மற்றும் அரசின் அலிம்கோ நிறுவனம் இணைந்து சேலம் உருக்காலை நிறுவனத்தின் சி.எஸ்.ஆர். நிதியிலிருந்து 25 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் காதொலிக்கருவி, பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி, மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலி, ஊன்றுகோல், சக்கர நாற்காலி மற்றும் மூன்று சக்கர சைக்கிள் ஆகிய உதவி உபகரணங்களை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி, சேலம் உருக்காலை நிர்வாக இயக்குநர் ஆர்.கே. பிசாரே, முதன்மை பொது மேலாளர் திரு.சிவசங்கர் மற்றும் அலிம்கோ நிறுவன மேலாளர் உள்ளிட்ட தன்னார்வலர்கள், மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று (05.01.2026) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.8 இலட்சம் மதிப்பீட்டிலான உதவி உபகரணங்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி செண்பகவள்ளி, சேலம் உருக்காலை நிர்வாக இயக்குநர் ஆர்.கே.பிசாரே, முதன்மை பொது மேலாளர் சிவசங்கர் ஆகியோர் உள்ளனர்.